மாலை முரசு

06.04.2024 – Salem & Chennai Edition

# சிறந்த செவிலியர் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு!

சென்னை, ஏப்.6–

சிறந்த செவிலியர் விருதுகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக டிவின்டெக்ஹெல்த்கேர் அகாடமி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அகாடமியின் இயக்குநர் டாக்டர் அ.மகாலிங்கம் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு:

உலக செவிலியர் தினத்தை முன்னிட்டு தமிழகத்தில் சிறப்பாக சேவையாற்றிய செவிலியர்களுக்கு விருது வழங்கி கவுரவிக்கப்படுகிறது.

அதன்படி குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் சேவையில் இருக்கும் கிராம சுகாதார செவிலியர்கள இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

அவை பரிசீலிக்கப்பட்டு 20 சிறந்த செவிலியர்களுக்கு மே 5–ஆம் தேதி சென்னையில் விருது வழங்கப்படும்.

கூடுதல் விவரங்களுக்கு 97104 85295 என்ற எண்ணையோ அல்லது mahali@mahali.in என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.